**அமர்வு வழக்கு எண்.23/2016 அ.சா.13** திரு.ஜெயப்பிரகாசம் த/பெ சுப்பையா

**1 ம் எதிரி இறப்பு. 2, 3, 4, 6 முதல் 11 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 எதிரிக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**07.11.2024. குறுக்கு விசாரணை**

1. 23.03.2014 அன்று ஆரணி அரசு மருத்துவமனையில் இரவு 10.30 மணிக்கு நான் பணியில் இருந்த மருத்துவர் என்றால் சரிதான். நான் பணி மருத்துவர் என்பதால் அந்த சமயத்தில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் தன்மையை பொறுத்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கும் கடமை என்னுடையதுஎன்றால் சரிதான்.

2. சிகிச்சைக்கு வந்தவர்கள் சம்பவம் அரசு மருத்துவமனைக்குள் நடந்ததாக தான் சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான்.அவ்வாறு நான் பணியில் இருந்த சமயத்தில் அரசமருத்துவமனை வளாகத்திற்குள் நடந்த சம்பவம் பற்றி புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றும், மேலும் அது குறித்து உயர் அதிகாரிகளுக்கு நான் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. நான் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. உண்மையிலேயே மருத்துவமனையில் சம்பவம் நடந்திருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றும் சமப்வம் எதுவும் நடக்கவில்லை என்பதால்தான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. நான் என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபரை மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன் என்பதற்கான குறிப்பு எதுவும் விபத்து பதிவேட்டு நகலில் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபருக்கு ஏற்பட்டிருந்த காயமானது பொதுவாக ஒரு நபர் கீழே விழுந்து கூர்மையான ஒரு ஆயுதத்தின் மீது மோதினால் அவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நான் வழங்கிய கருத்துரையானது நோயாளியின் டிஸ்சார்ஜ் சம்மரி அடிப்படையில் வழங்கப்பட்ட கருத்துரை என்றால் சரிதான்.

6. சிகிச்சை எடுத்து கொண்ட நபரின் நுண்கதிர்படம் மற்றும் ஸ்கேன் ரிப்போர்ட் எதையும் நான் பார்த்து பரிசீலனை செய்யவில்லை என்றால் சரிதான்.